செ. கு. எண்: 208 நாள்: 23.11.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 23.11.2018

---

மாண்புமிகு புதுச்சேரி மாநில முதலமைச்சர் திரு.வி. நாராயணசாமி அவர்களின் அன்பு தாயார் திருமதி வி. ஈஸ்வரி (எ) ஜெகதீஸ்வரி அவர்கள் நேற்று (22.11.2018) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

திரு.வி. நாராயணசாமி அவர்களின் அன்பு தாயார் திருமதி வி. ஈஸ்வரி (எ) ஜெகதீஸ்வரி அவர்கள் நல்லதொரு தாயாகவும், நல்ல வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அவரது மறைவு திரு. நாராயணசாமி அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

தனது அன்புத் தாயாரை இழந்து வாடும் திரு.வி. நாராயணசாமி அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**